
# தமிழர் வாழ்வியல் அன்றும் இன்றும்

(கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு)



தமிழ்த்துறை
பக்தவத்சலம் நினைவு மகளிர் கல்லூரி
கொரட்டூர் சென்னை -50

தமிழர் வாழ்வியல் அன்றும் இன்றும்



ISBN 978-93-47021-22-0
9 789347 021220
TODAY PUBLICATIONS

# தமிழர் வாழ்வியல்

## அன்றும் இன்றும்


தொகுப்பாசிரியர்கள்

**முனைவர் ச. வசந்தி**

**முனைவர் நி.நதியா**

**முனைவர் சு.சசிகலா**

**திருமதி. வி.சி.சித்ரா**



**டுடே பதிப்பகம்**

திருவல்லிக்கேணி

சென்னை – 600 005.

## நூல் விவரக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **தமிழர் வாழ்வியல் அன்றும் இன்றும்** |
| தொகுப்பாசிரியர்கள் | : | முனைவர் ச. வசந்தி |
| | : | முனைவர் நி.நதியா |
| | : | முனைவர் சு.சசிகலா |
| | : | திருமதி. வி.சி.சித்ரா |
| உரிமை | : | தொகுப்பாசிரியர்கள் |
| பொருள் | : | ஆய்வுக்கட்டுரைகள் |
| பதிப்பு | : | பதிப்பு மார்ச்சு, 2026 |
| வெளியீடு | : | தமிழ்த்துறை பக்தவத்சலம் நினைவு மகளிர் கல்லூரி கொரட்டூர், சென்னை – 50. |
| மொழி | : | தமிழ் |
| நூல் அளவு | : | 1/8, டெம்மி |
| அச்சகம் | : | டுடே பிரிண்டர்ஸ் சென்னை-5 |
| பக்கம் | : | 636 |
| விலை | : | ரூ 700/- |
| ISBN | : | 978-93-47021-22-0 |

(ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களின் பொறுப்புக்குரியவை)

**செல்வி. ஜெ. சண்முகப்பிரியா**
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம் ),தமிழ்த்துறை ,
வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம் ,
பல்லாவரம் ,சென்னை - 117.

**முனைவர் சி. கமலக்கண்ணன் எம். ஏ, எம். பில். பிஎச்டி.**
நெறியாளர் , தமிழ்த்துறை ,
வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம் ,
பல்லாவரம் ,சென்னை - 117.

# தமிழரின் வாழ்வில் கொடையறம் அன்றும் இன்றும்

**முன்னுரை**

சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் தாம் வாழும் முறையில் கடைபிடித்த இயல்பான வழிமுறைகளை அறமாக எடுத்துக்கொள்ளலாம். மனிதனை மனிதன் சார்ந்து வாழக்கற்றுக் கொண்ட காலந்தொட்டே அறம் எனும் உயர்ந்தபண்பு தழைத்து ஓங்க ஆரம்பித்தது. பிறரை நேசிக்கும் பண்பும் பிறருக்குக் கொடுத்து வாழும் பண்புகளும் உயர் அறங்களாக நம் முன்னோர்களால் காலம் காலமாகப் போதிக்கப்பட்டு வந்துள்ளன.

பண்டைத்தமிழரின் பண்பாட்டையும் மரபையும் எடுத்துக் கூறும் சங்ககாலம் தொட்டு தற்காலம் வரை எழுந்துள்ள, எழுதப்பட்டுள்ள ஒவ்வொரு இலக்கியமும் தமிழர்களின் கனிவான குணத்தையும் பகிர்ந்துண்ணும் விருந்தோம்பல் பண்பையும் பிறருக்குக் கொடுத்து வாழும் உயரிய பண்பையும் எடுத்துக் கூறுகின்றன.

இத்தகைய கொடைப்பண்பு பற்றிப் பழமொழி நானூறு, திருக்குறள், புறநானூறு, மணிமேகலை, ஔவையார் தனிப்பாடல், குறுந்தொகை, நற்றிணை போன்ற இலக்கியங்கள் மூலம் அறிய

முடிகிறது. தாம் வாழும் வாழ்வில் தன் மனதிற்கு விரோதமின்றி இயல்பான செயல்முறைகளைச் செயல்படுத்தியதே அறம் எனக் கொள்ளலாம். இவற்றைச் சங்க கால மக்கள் வாழ்வியலில் வாழ்ந்த குறிப்புகளை இலக்கியங்கள் வழி அறிவோம்.

**பொருளுரை**

இல்லறம் செய்வது உதவுவதற்கும், கொடுக்கும்போது மனம், மொழி, மெய்களோடு உடன்பட்டு கொடுத்தலுக்கும், முகமலர்ச்சியின் அவசியம். கொடுக்காசெல்வம் இருந்தும் பயனில்லை. தமிழரின் அன்றைய வாழ்வில் மருந்தாயினும் தான் மட்டும் உண்ணாததையும் இரவுப்பொழுதில் விருந்தினர் எவரேனும் உளரோ எனக் கேட்பதையும் விருந்தினர் வராமைக்கு வருந்துவது குறித்தும் மேலும் இவை போன்ற சில நிகழ்வுகள் குறித்தும் இன்று தமிழரின் விருந்தோம்பலில் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்தும் காண்போம்.

**இல்வாழ்வது விருந்தோம்புதற்கே!**

பாரிமகளிரும் அரச வாழ்வு அல்லாது இயல்பான மக்கள் வாழ்வை வாழ்ந்த போது, தங்களை நாடிவந்த பாணர்களுக்குத் தங்களின் வளம் குன்றிய போதும் இல்லை என்று கூறாது, உலைநீரால் பசியையும் போக்கி, அந்நீரில்பொன்னை இட்டுக் கொடுத்ததைத் தமிழ் இலக்கியத்தில் பழமொழி நானூறு பாடலில் இடம்பெற்ற குறிப்புகளைக் காணும் போது, மன்னனானவன் மக்களுக்குக் கொடை கொடுத்து மக்களைக் காப்பாற்றக் கூடியவன். மன்னன் செய்யும் உதவியானது அவனது நாட்டின் வளத்தைப் பொறுத்தே அமையும். அவ்வாறு பாரி என்ற மன்னன் பறம்பு மலையை ஆட்சி செய்தவர். அவரது ஆட்சியில் மாரியானது தன் வளத்தைக் குறைத்தாலும் குறைக்கும். மன்னன் வாரிக் கொடுப்பதைக் குறைக்கமாட்டான்.

அவன் தன் மக்களை மட்டும் அல்லாது பிற உயிரினங்களை மதித்துப் போற்றினான் என்பதை அவனது தேரை முல்லைக்கொடிக்குக் கொடுத்த போதே அறியலாம். அவ்வாறு வாழ்ந்த மன்னன், இறப்பிற்குப்

பிறகும் அவரது வழி தோன்றலான மகள்கள் பறம்பு மலையானது பாரிக்குப் பின், பாரி இல்லை என மாரியும் வராது போனதால் வறட்சியுற்ற பறம்பு மலையில் வளம் குன்றியது, அந்நிலையில் பொன்னையும் இட்டு கொடுத்து, தன் மரபுவழி அறமாகிய கொடையை விருந்தினர்க்குக் கொடுத்து உதவிசெய்வதே சிறந்த கடமையாக இயல்பான மக்கள் வாழ்வில் கடைபிடித்ததை அறிய முடிகிறது. பக்தி இலக்கிய காலக் கட்டத்தில் இறைவன்மீது கொண்ட பக்தியின் மூலமாக வாழ்க்கை முறை பின்பற்றப்பட்டன. தானமும் தவமும் நற்செயல்களாகப் பின்பற்றப்பட்டன. பிறருக்கு உணவளித்த பின் உண்பதே சாலச்சிறந்தது எனக் கருதி அடியார்களுக்குத் தொண்டு செய்வதை மக்கள் அறமாகக் கருதினர்.

திருத்தொண்டர் புராணமான பெரிய புராணத்தில், ‘நல்வளம் சுருங்கினும் நன்மனம் சுருங்காதே’ என்னும் வரிகள் இளையான்குடியார் செல்வ வளம் பெற்றிருந்தபோது சிவனடியார்களுக்கு அமுதளிப்பதைக் கடமையாகக் கொண்டிருந்தார். அவ்வாறு, இருக்கையில் அவரது செல்வவளம் குன்றி நல்குரவு காலத்தில் தனக்கே உணவில்லாத போது, நடுநிசி நேர கடும் மழையில் அடியார் ஒருவர் அமுதுவேண்டி வர, அப்போது கொடையறம் செய்வதே இல்லறப்பயன் எனக் கருதிய இளையான்குடியாரும் அவரது மனைவியும் செய்வதறியாது திகைத்து நின்ற வேளையில், ஒரு சிந்தனை தோன்றி, முந்தைய நாள் விதைத்த விதைநெல்லை அரித்து வந்து சமைத்து விருந்து படைத்து இல்லறமாகிய மனையறம் பாராட்டினர், என்பதை அறிய முடிகிறது.

**‘மாரியொன்று இன்றி வறந்திருந்த காலத்தும்**
**பாரிமடமகள் பாண் மகற்கு – நீர் உலையுள்**
**பொன் திறந்து கொண்டு புகாவா நல்கினாள்**
**ஒன்றாகு மூன்றிலோ இல்’**

**(பழமொழி நானூறு – 171)**

எனும் பாடலில் மூன்றுறை அரையனார் பாரி மகளிர் மழைவளம் குன்றிய போதும், தம்மிடம் வந்து பொருள் கேட்கும்

பாணர்களுக்கு உலைநீரில் பொன் இட்டுக் கொடுத்ததாகக் கூறுகிறார். அதாவது இல்லறத்தில் வாழும் பாரிமகளிர் மழையின்றி பயிர்வளம் குறைந்தபோதும் விருந்தினார்க்குக் கொடுத்து உதவி செய்வதற்காகப் பொன், பொருள்களைச் சேர்த்து வைப்பர் என்பது புலனாகிறது. இல்வாழ்வானது, அறவழியில் பொருள் ஈட்டி அதனைத் தாமும் தம் சுற்றத்தாரும் மட்டும் அல்லாது விருந்தினார்க்கும் கொடுத்து உதவி மகிழ்வதே சிறந்த கடமையாகும்.

**'பெறல் அரும்புதல்வன் தன்னைப் பாயினுள் பெய்து மூடிப்**
**புறமனை மூன்றில் பாங்கு ஓர் புடைய்நில் மறைத்து வைத்தே**
**அற இது தெரியா வண்ணம் அமுது செய்விப்போம் என்று**
**விறல் உடைத் தொண்டனர் பால் விருப்போடு விரைந்து வந்தார்**
**(பெரியபுராணம் -1816)**

அப்பூதி அடிகள் இல்லறத்தில் திருநாவுக்கரசருக்கு உணவளிக்கும் தருணத்தில் அவரது மகன் பாம்பு தீண்டி இறக்க நேரிடுகிறது. அத்துயரத்தை மறைத்துக் கொண்டு விருந்தினர்க்கு உணவளிப்பதே சிறப்பு என்பதைக் கடமையாகக் கொண்டது. இதன் மூலம் இல்லறநெறியில் இன்பமிழந்தாலும் கொடுத்து உதவி செய்வதைக் கடமையாகக் கருதியுள்ளனர்.

### விருந்தோம்பும் முறைமை

இரவல் கொடுத்ததால் வரகும் தினையும் தீர்ந்துவிடவே விதைப்பதற்கு வைத்திருந்த தானியங்களை விருந்தினருக்கு உணவு சமைத்துக் கொடுத்தாள் என்பதில் இல்லறக்கடமை உதவி செய்வதே என்பதையும்,

**'தங்கனீர் சென்மோபுலவீர் நன்றும்**
**சென்றதற் கொண்டு மனையோள் விரும்பி**
**வரகும் தினையும் உள்ளவை எல்லாம்**
**'இரவில் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்**
**..............................................**

**குரல் உணங்கு விதைத்தினை உரல்வாய் பெய்து’**

**(புறம் -333)**

இல்லறக் கடமையில் இருக்கும் தலைவன் கொடுக்கும் பொருட்டு தம் போர்வாளை வைத்து விருந்தினருக்கு விருந்து செய்தததையும் சிறிய யாழினைக் கொண்டு பாடும் பாணன் தம் சிறிய யாழைப் பணையமாக வைத்து தம் தலைவன் உதவி செய்வதையே கடமையாகக் கொண்டு இருக்கிறான் என்பதைக் கூறியுள்ளார்.

**‘நெருநை வங்க விருந்தினருக்கு மற்று த்தன்**
**இரும்புடப் பழவாள் வைத்தனன் இன்று**
**கருங்கோட்டுச் சீறியாழ் பணையம் இது கொண்டு**
**ஈவது இலாளன் ............’ (ஐங்குறுநூறு -71 )**

என்ற பாடல் வழி அறிய முடிகிறது.

**முகமலரும் விருந்து**

கொடை என்பது பிரதிபலனின்றிக் கொடுத்தல். அவ்வாறு கொடுக்கும் போது மனம், மொழி, மெய் ஆகியன பொருந்தி கொடுத்தலே சிறப்பு. அதாவது, ‘அகத்தின் அழகு முகத்தில் தெரியும்’ என்பதற்கிணங்க கொடை கொடுத்தலின் போது முகமலர்ச்சி இன்றியமையாததாகிறது. அதற்கு உவமையாக அனிச்ச மலரை கூறியுள்ளார் திருவள்ளுவர். அனிச்சமலர் நுகர்ந்தாலே வாடிவிடும். கொடை கொடுப்பவரின் முகம் வாடினால் கொடையைப் பெறுபவரின் மனமானது அனிச்ச மலர்போல் வாடிவிடும். கொடையில் சிறந்தவர்களுள் ஒருவரான அதியமான் புளிப்பான நெல்லிக்கனியைக் கொடுத்த போதும், அவரது மனம், மொழி, மெய்களின் மலர்ச்சியானது, அக்கனி அறுசுவையை விட உயர்ந்ததாகவும் ஆயுளை வளர்க்கும் அமிழ்தக் கனியாகவும் உயர்த்தப் பட்டுள்ளது.

**குழையும் விருந்து**

விருந்து உபசரிப்பிற்கு முகமலர்ச்சி என்பது மிகவும் அவசியம்.

**'மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து' (குறள் -90)**

அனிச்சமலரின் மென்மை போன்றது விருந்தினரின் மனம் எனக்கருதிய திருவள்ளுவர் நுகர்ந்தாலே அனிச்சம் வாடிவிடும்.முகம்சுளித்து விருந்தினரை நோக்கினால் அவரது மனம் வடிவிடும் என்கிறார். முகம்சுருக்கி கொடுக்கும் விருந்தால் மனம் அஞ்சி அறுசுவை உணவும் நஞ்சாக மாறிவிடும்.

**செல்வத்து பயன்**

'வயிற்றிக்குச் சோறிட வேண்டும் வாழும் மனிதர்க்கெல்லாம்' பாரதியார் பாடலுக்கு இணங்க ஒருவர்க்கு உணவளித்து உதவி செய்வது ஓர் உயிரைக் காப்பாதற்குச் சமம். மணிமேகலையில் அட்சயபத்திரத்தைப் பெற்றவுடன் அறம் செய்ய விரும்பி, உணவளிக்க எண்ணினாள். மணிமேகலையும் ,

**'மண்டினி நாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"**

**(மணிமேகலை-11.95-96)**

உலக உயிர்களுக்கு உணவளிப்பது உயிரைக்காப்பது எனவே, அதைச் செய்யாத செல்வந்தர் மடமையே .

**"பசிப்பிணி தீர்த்தல் என்றே அவரும்**
**தவப்பெறு நல்லறம் சாற்றினார்"**

**(மணிமேகலை-12:118-119)**

சாத்தனார், உலக உயிர்களுக்கு உண்டி , உடை உறையுள் கொடுப்பதே சிறந்த அறம் என அறத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளார். இதையே சங்க இலக்கியமான புறநானூற்றில்,

**'நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' (புறம் – 18)**

எனும் வரிகள் மூலம் பிறருக்கு உணவளித்து உதவி செய்வது ஓர் உயிரைக் காப்பதற்கு ஒப்பானது. அத்தகைய செயல்களைச் செய்யாமல் செல்வத்தைச் சேர்த்து வைத்திருப்பவர் நல்லறிவு இருந்தும் மடமையாராகவே கருதப்படுவர்.

சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் பிறருக்குக் கொடுத்து வாழ்வதே இல்லறமாகக் கருதி உள்ளனர். மன்னர்களும் வள்ளல்களும் தம்மை நாடி வந்தவர்களுக்குப் பொருள்களைக் கொடுத்து அவர்களுக்கு மரியாதை செய்து வழி அனுப்பி வைப்பதே சிறந்த அறமாகக் கொண்டுள்ளனர. செல்வத்து பயன் பிறருக்குக் கொடுத்து வாழ்தலை அடிப்படையாகக் கொண்டது என்பதற்குச் சான்று,

**'உண்பது நாழி உடுப்பவை இரண்டே**
**பிறகும் எல்லாம் ஓர் இருக்குமே அதனால்**
**செல்வத்துப்பயன் ஈதலே' புறம் -186**

புறநானூற்று பாடல் வரி அறிய முடிகிறது.

நற்றிணையின் முல்லை திணையில் வினைமுடித்து திரும்பும் தலைவன் தனது இல்லாளின் அறத்தைக் கூறுகிறான். அதாவது தலைவனின் சொல் மீறாது இல்லிலிருந்து நல்லறம் செய்யும் கற்பினை உடைய தலைவி இரவு பொழுதாக இருப்பினும் புதியவராக வந்தவர் எவரேனும் இருக்கிறீரோ என ஊரின் கடைகோடி வரை கேட்கும்படி கூவி அழைத்து உணவு கொடுத்து உதவுவாள் என்பதைச் சங்க இலக்கியத்தின் பாடல் வழி அறிய முடிகிறது

**‘அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்’**

**(நற்றிணை -142)**

விருந்தினராக வர இருக்கும் தலைவனை எதிர்பார்த்து இருந்த தலைவிக்கு வீட்டின் நுழைவாயிலில் இரவு வீட்டின் நுழைவாயிலில் கதவு அடைப்பதற்கு முன் புதிதாக வந்தவர் எவரேனும் இருக்கிறீரோ எனக் கேட்ட பின்னே கதவை அடைக்கும் பழக்கம் இருந்தது. இதன் மூலம் கொடையானது இல்லற விருந்தின் மூலம் செயல்படுத்தப்பட்டது என்பதைக் குறுந்தொகை பாடல்118 வழி அறிய முடிகிறது.

**‘உண்பது நாழி உடுப்பவை இரண்டே**
**பிறவும் எல்லாம் ஓரோக்குமே**
**அதனால் செல்வத்துப் பயன் ஈதல்’ ( புறம்-189)**

‘ஈயார் தேட்டை தீயோர் கொள்வார்’ என்பதற்கு இணங்க, கொடுத்து உதவாதவர் செல்வத்தைத் தீயோர் கவர்ந்து செல்வர். எனவே, ஈதலின் விருந்தோம்பல் சிறந்த அறமாகக் கருதப்படுகிறது .

**‘அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்’ (நற் -142)**

இல்லறக்தில் தலைவியானவள் இரவு நேரத்திலும் புதியவர் வருகையாயின் முகம் நோக்காது முகமலர்ச்சியுடன் மனமகிழ்வோடு உபசரிப்பாள்.

**‘பலர்புக்குவாயில் அடைப்ப கடவுநர்**
**வருவீர் உளீரோ’ ( குறுந் -118 )**

நன்னாகையார் இல்லற வாழ்வில் தலைவியானவள் இரவு உறங்குவதற்கு முன் ஊரின் நுழைவு வாயிலில் யாரேனும் விருந்தினர் இருக்குறீர்களா? எனக் கேட்ட பின்பே உறங்கச் செல்லும் வழக்கம் இருந்ததாகக் கூறியுள்ளார்.

**இன்று விருந்தோம்பல்**

இன்றைய காலச்சூழலில் திண்ணை இல்லா வீடுகளால் விரட்டி அடிக்கப்பட்ட விருந்தோம்பல் திருவிழாக்களின் ஊர்வலத்தில் அன்னதானம் என்ற பெயரில் கொடுக்கப்படுகிறது. உதாரணமாக, தலைவர் மற்றும் முக்கிய பிரமுகர்களின் பிறந்தநாள் விழாக்களில் முகம் தெரியாத விருந்திநர்களுக்கு உணவளிக்கப்படுவதைச் சமூக வலைதளங்களில் இன்றும் காணமுடிகிறது. சான்று: திருநெல்வேலி பகுதியில் நடக்கும் கொடை விழா

உலகம் உள்ளங்கையில் சுருங்கி விட்டதால் பாரதிதாசன்,

**‘பொன் துலங்கு மேனி**
**புதுமெருகு கொள்ள முகம்**
**அன்றளர்ந்த செந்தா**
**மரையாக நன்றே**
**வரவேற்றாள் குடும்பவிளக்கு -**

என விருந்தினரை வரவேற்கும் முறையை இக்கால இலக்கியமாம் குடும்பவிளக்கில் கூறியுள்ளார். வாசலில் நின்று விருந்தினரை வரவேற்ற நிலை மாறி, இணையத்தின் பயன்பாட்டால் விருந்து வாசலில் நின்று விருந்தினரை வரவேற்கும் நிலை மாறி உள்ளது. விருந்து கொண்டு வருபவர் முகம் தெரியாதவராகையில் உலகம் சுருங்கினாலும் புதியவருக்குக் கொடுப்பதைப் புதுமையாக எடுத்துக் கொள்ளலாம். மனரீதியான ஏற்பானது விருந்தினரை ஏற்பதும் விருந்தினர் ஆவதற்கு இன்றைய காலச்சூழலில் ஓர் ஐயமே! உருவான நிலை ஏற்பட்டுள்ளது. ஆனாலும் குழந்தைகள் காப்பகம், முதியோர் இல்லம் போன்ற கருணை இல்லங்களைத் தொடர்பு கொண்டு பாதுகாப்பான விருதோம்பலை நடைமுறைப்படுத்துகின்றனர் நம் தமிழினங்கள்.

**முடிவுரை**

மனித வாழ்வியல் அடிப்படையாக இருப்பது உணவு, உடை, உறைவிடம் சங்ககால மக்களும் வாழ்வியல் நெறிமுறைகளைச் சரியாகக் கடைபிடிக்கும் மக்களும் நடைமுறைப்படுத்தும் பண்பானது உதவி செய்தல். அதனை ‘உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்’ என்பதற்கிணங்க பிறருக்கு உணவளிப்பது உயிரைக் காப்பதற்கு ஒப்பாகக் கருதப்படுவதால், தமிழர் விருந்தோம்பலைத் தம் தலையாயக் கடமையாகக் கொண்டுள்ளனர். இல்லறத்தில் நல்லறம் செய்ய விருந்தோம்பல் கொடுப்பது கொடையறத்தின் வழிகோலாகவும் அடிப்படைத்திறனாகவும் விளங்குகிறது. தம்மை நாடி வந்து இரப்பவருக்கு இல்லை என்று கூறாததே இல்லறமாகக் கடைபிடிக்கப்பட்டுள்ளது. சங்க காலம் தொட்டே இன்று வரை கொடையானது ஊர் திருவிழாக்களில் நடைபெற்று வருவதை நாம் இன்றும் உணரலாம்.